செ.வெ.எண்: 183 நாள்: 28.02.2020

**விவசாயிகள் தமிழக அரசின் வேளாண் திட்டங்களை அறிந்து பயன்பெற வேண்டும்.**

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.02.2020) நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் திட்டங்கள் குறித்த விளக்க கையேட்டினை விவசாயிகளுக்கு வழங்கினார்.

இதன் பின்னர் இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

தமிழக அரசு விவசாயிகளின் நலனுக்காக எண்ணற்ற பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் குறைகளை போக்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பயிர் காப்பீடு தொகை வழங்க கோரியும், வேளாண் கருவிகள் வழங்க கோரியும், தென்னங்கன்றுகள் மானியத்தில் வழங்க கோரியும் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 60 மனுக்கள் வரப்பெற்றுள்ளது. இதன் மீது விரைவான நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழையளவு 805.6 மி.மீ. ஆகும். பிப்ரவரி மாதம் வரை பெறப்பட வேண்டிய இயல்பான மழை அளவான 19.8 மி.மீ பதிலாக 0.10மி.மீ அளவு மட்டுமே மழை பெறப்பட்டுள்ளது. பிப்ரவரி மாதத்தில் பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவு 7.2 மி.மீ ஆகும். ஆனால் இம்மாதம் மழை ஏதும் பெறப்படவில்லை.

மேலும் 2019-20 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முடிய நெல் 85,800 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 2,564 எக்டர் பரப்பளவிலும், பயறுவகைப் பயிர்கள் 4,306 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்து 10,832 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 1,864 எக்டர் பரப்பளவிலும், தென்னை 9,046 எக்டர் பரப்பளவிலும், எண்ணைய்பனை 15 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 19.528 மெ.டன் நெல் விதைகளும், 4.12 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 3.30 மெ.டன், சிறுதானியங்கள் 1.596 மெ.டன், எள் விதைகள் 1.680 மெ.டன் விதைகளும் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்றுச் சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. விதை விற்பனை உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் வழங்கிடத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 4,409 மெ.டன்னும், டிஏபி 2,458 மெ.டன்னும், பொட்டாஷ் 2,504 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 5,630 மெ.டன்னும் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் உழவர் கடன் அட்டை பெற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளை அணுகி பெற்றிடலாம். உழவர் கடன் அட்டை மூலம் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்தல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு ஆகியவற்றிற்கு கடனாக ஈட்டுறுதி இல்லாமல் ரூ.1.60 லட்சம் வரையிலும், நில ஈட்டுறுதி அடிப்படையில் ரூ.3 இலட்சம் வரையிலும் 7 சதவித வட்டியுடன் கடன் பெறலாம். இக்கடன் அட்டையை பயன்படுத்தி பெறும் கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்தினால் போதுமானது. கிஷான் அட்டை 5 ஆண்டுகள் மட்டுமே செல்லத்தக்கது. இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பயன் பெறலாம்.

பாரத பிரதமரின் விவசாயிகள் ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் தகுதியான அனைத்து விவசாயிகளுக்கும் ஆண்டிற்கு 3 தவணைகளாக ரூ.2,000 வீதம் மொத்தம் ரூ.6,000 வழங்கப்படுகிறது. 2 தவணைகள் வரப்பெற்று 3 ஆவது தவணை வரப்பெறாத விவசாயிகளின் பட்டியல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பட்டியலிலுள்ள விவசாயிகள் தங்களுடைய ஆதார் அட்டை நகலுடன் சென்று வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், பொது சேவை மையம் ஆகியவற்றில் ஆதார் அட்டைப் பதிவேற்றம் செய்தலிலுள்ள பிழையைச் சரி செய்ய வேண்டும்.

மேலும் பாரத பிரதமரின் விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் 18 முதல் 40 வயது வரை உள்ள சிறு, குறு விவசாயிகள் இத்திட்டத்தில் இணைய முடியும். விவசாயிகள் தங்கள் வயதுக்கேற்ப மாதந்தோறும் தொடக்கத்தில் கட்டும் ரூ.55 முதல் ரூ.200 வரை எந்தந்த தொகையோ அதே தொகையினை 60 வயது வரை செலுத்த

வேண்டும். 61 வயது முதல் மாதந்தோறும் வாழ்நாள் முழுவதும் ரூ.3,000 வீதம் ஓய்வூதியமாக கிடைக்கும். ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம் போன்ற ஆவணங்களுடன் அருகில் உள்ள பொது சேவை மையத்திற்கு சென்று, பதிவு செய்து விவசாயிகள் அனைவரும் பிரதம மந்திரியின் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம்.

எனவே தமிழக அரசு விவசாயிகளின் நலனுக்காக செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களை விவசாயிகள் அறிந்து உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) பெரியசாமி, கூட்டுறவுத் துறை மண்டல இணைப்பதிவாளர் உமாமகேஸ்வரி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் தீபாசங்கரி, தோட்டக்கலை துணை இயக்குநர் அருணாசலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்புராஜ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரமேஷ் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள், ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**